www.tamilarangam.net



சாதி அமைப்பு
தகரட்டும்!
சமத்துவ நீதி
ஓங்கட்டும்!

**VADU** இதழ் -05,06 ஒக்டோபர் - நவம்பர் - 2007

**எமது வாசகர்களுக்கு வணக்கங்களுடன்,**

எமது **"வடு"** உறவுகளை மீண்டும் சந்திப்பதில் மகிழ்ச்சியடைகின்றோம். சற்று காலதாமதமாகவே இம்முறை "வடு" பிரசுரவேலைகளை பூர்த்தியாக்க முடிந்தது. ஆகவே இவ்வெளியீடு இதழ்-05, இதழ்-06 ஆகியவற்றை உள்ளடக்கி அதிகபக்கங்களுடன் வெளிவருகின்றது. பிரான்ஸ் தலித்மாநாட்டை ஒட்டிய வேலை பளுக்கள், பொருளாதார சுமைகள் நீங்கள் அறியாததொன்றல்ல. அவைகளும் எமது "வடு"வின் சுணக்கத்திற்கு காரணமாயின.

தலித் மநாட்டில் இடம்பெற்ற பேச்சுக்கள், உரையாடல்கள், விவாதங்கள்... பற்றி அறிந்திருப்பீர்கள். எமது வாசகர்களில் பலர் நேரிடையாகவும் மாநாட்டில் கலந்து கொண்டிருப்பீர்கள் என நம்புகின்றோம். மற்றும் பத்திரிகை, வானொலிகள், இணையத்தளங்கள் போன்றவற்றின் ஊடாகவும் மாநாட்டு விபரங்களை அறிந்து கொண்டிருப்பீர்கள். ஆகவே இவ்விதழ்களில் மாநாட்டு விடயங்களை விலாவாரியாக தர நாம் முயலவில்லை. புகலிடத்து தலித் அரசியலின் தோற்றம், வளர்ச்சி பற்றி ஒரு பொதுவான கண்ணோட்டத்தை கொண்ட கட்டுரை ஒன்றை மட்டுமே இவ்வெளியீட்டில் சேர்த்திருக்கின்றோம். மாநாட்டு நிகழ்வுகள் அனைத்தையும் ஆவணப்படும் நோக்கில் விரைவில் தலித் சமூகமேம்பாட்டு முன்னணி சார்பில் மாநாட்டு சிறப்பு மலர் ஒன்று வெளியிடப்படுவதற்கான ஏற்பாடுகளும் இடம் பெற்று வருகின்றது என்கின்ற செய்தியையும் எமது வாசகர்களுக்கு எத்திவைக்கின்றோம்.

தலித் மாநாடு வெற்றிபெற எமது வாசகர்களும், முற்போக்கு சக்திகளும், ஊடகவியலாளர்களும் அளித்த ஆதரவிற்கு "வடு" ஆசிரியர்குழு நன்றி நவில்கின்றது. எல்லாவிதத்திலும் எமது எதிர்பார்ப்பின் அளவையும் தாண்டி மாநாடு சிறப்புற நடந்தேறியமை எம்மை மென்மேலும் உற்சாகப்படுத்தியுள்ளது.

தலித் மக்களின் வாழ்வியல் உரிமைகள் மட்டுமல்ல அரசியல் உரிமைகள் குறித்தும் அலசப்பட்டதோடு தமிழ் மக்களின் பெயரில் ஏற்பட போகின்ற அதிகார பகிர்வில் தலித் மக்களின் இடம் என்ன என்ற கேள்விகளையும் இம்மாநாடு எழுப்பியிருக்கிறது. இக்கோரிக்கைகளை பலப்படுத்தும் நோக்கோடு எமது "வடு" எதிர்காலத்தில் வேகமாக முன்னேறும், முன்னேற வேண்டும். எமது உறவுகளின் தொடர்ச்சியான ஆதரவே அவற்றை சாதிக்கும். (ஆ.ர்)

njhlh;GfSf;F:-
**F.D.S.D.S**
MR.THEVATHASAN
4,PLACE ROGER SALENGRO
95140 GARGES LES GONESSE
France
(E-MAIL:VADU.WORLD@hotmail.fr)

**நன்கொடை-1€**
**சந்தா வருடம்-15€**
**(தபாற்செலவு உட்பட)**

**இலங்கை, இந்திய வாசகர்களுக்கு இலவசம்.**

## தோழர் எஸ்.ரி.என்.நாகரட்ணம்
## 80 வது பிறந்த தினம் (1927-1989)

**எஸ்.ரி.என். அவர்கள் தீண்டாமை வெகுஜன ஒழிப்பு இயக்கத்தின் தலைவராக செயற்பட்டவர். இவர் தலைவராயிருந்த காலத்தில் இயக்கத்தின் நோக்கிற்கும் போக்கிற்கும் மிக வல்லவராக விளங்கினார். இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து சாதி ஒடுக்குமுறைப் போராட்டங்களிலும் முதன்மைப் போராளியாக களமிறங்கி அஞ்சா நெஞ்சனாக போரிட்டு பல வெற்றிகளை குவிப்பதற்கும் காரணமாக இருந்தவர். இவர் தலைமை வகித்த காலத்தில்தான் 1966 ஒக்டோபர் 21 எழுச்சி ஊர்வலம், மாவிட்ட புரம் கந்தசாமி ஆலயம், மட்டுவில் பன்றி தலைச்சி அம்மன் கோயில் நுழைவு என்பன நிகழ்த்தப்பட்டது.**

**தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக உறுதியுடன் போராடிய எஸ்.ரி.என். அவர்களை வடு நன்றியுடன் நினைவு கூருகின்றது.**

வடிவமைப்பு - விஜி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சாதியைக் காப்பாற்றும் பல சாதி அபிமானிகளுக்கு எச்சரிக்கை!

**-சேனன்-**

இன்று சாதியம் பற்றி, குறிப்பாக புலம்பெயர் சமுகத்திற்குள் சாதியம் பற்றி பேசுவது பல்வேறு வகை கோபங்களை கிளறும் என்பது தெரிந்ததே. தமிழ் சமுதாயத்திற்குள் ஊறி உறைபட்டுக்கிடக்கும் சில ஊத்தைகளை பற்றி ஒருசொல் அங்க இங்க பேசப்படும்போது உலகின் அனைத்து புனிதங்களினதும் பெயரில் எதிர்ப்புக் கிளம்பி அடி விழுவது வழமையாக நடக்கிறது. எங்காவது மூலைக்கு மூலை முனகுபவர்கள் கூட கூச்சப்பட்டு ஒதுங்கும்படி காழ்ப்போடு ஒதுக்கப்படுகிறார்கள். புலம் பெயர்ந்த தமிழ் சமூகத்திற்குள்ளும் மேலாதிக்க (வர்க்க, சாதிய) சிறுபான்மை செல்வாக்கு செலுத்தி வருவதன் வெளிப்பாடே இது. இல்லாத கதை பேசி சும்மா தாமே என்றிருக்கும் சமுதாயத்தையும் கெடுக்க முற்படுகிறார்கள் , «இதென்ன புதுக்கதை»,

«இப்படியும் நடக்குமோ?» «ஏன் தேவையில்லாம பிரச்சினைகளை இழுக்கிறாய்?», என்ற குரல்கள் முதற்கொண்டு, «வெளிநாட்டில் இந்தப்பிரச்சின இல்லை» என்று அடித்துக்கூறி சூட்சுமமாக விதண்டாவாதம் செய்பவர்கள் உட்பட அனைவரும் சுய சாதிய, வர்க்க நலன்களுக்காக செயற்படுபவர்களாகவே இருக்கிறார்கள். வெளியில் பயந்து பாசாங்கு காட்டும் வெள்ளாள அறிவிலி மடச்சாம்பிரானிகளின் ஆக்கினைகள் பல லண்டனில் நடந்து வருகிறது. உதாரணமாக «காரைநகர் நலன் புரிச் சங்கம்» என்று இயங்கும் ஒரு அமைப்பை சொல்லலாம். இவ்வமைப்பு காரைநகர் மேலாதிக்க வெள்ளாளரின் புகலிடமாக கடந்த 20-25 வருட காலமாக இயங்கிவருகிறது. காரைநகரில் அதிகம் வாழும் ஒடுக்கப்படும் சாதியினரை புறக்கணிக்கும் இச்சங்க மேலாதிக்க வெள்ளாளர் அப்படியே ஊர் மேலாதிக்க பழக்கங்களை இங்கும் தொடர்கின்றனர். காரைநகர் சாதிய கொடுமைகளின், அதற்கு எதிரான போராட்டங்களின் களமாக நீண்டகாலமாக இருந்து வருகிறது. காரைநகர் தண்ணிப் பிரச்சினை இதற்கு ஒரு முக்கியகாரணமாக இருந்து வந்திருக்கிறது. இது பற்றி அறிவது இங்கிலாந்துக்கும் கடத்தப்பட்டு இருக்கும் மேலாதிக்க நடவடிக்கைகளை புரிந்துகொள்ள உதவும்.

**பாரிசில் நடைபெற்ற முதலாவது "தலித் மாநாட்டை" முன்னிட்டு லண்டலில் இருந்து வெளி வரும் தேசம் சஞ்சிகை தலித் மாநாட்டுக் கான சிறப்பிதழ் ஒன்றை லண்டன் குரல் எனும் பத்திரிகை ஊடாக வெளியிட்டது. அச்சிறப்பித ழில் உள்ளடங்கிய கட்டுரைகளில் ஒன்றான சேனன் அவர்களது கட்டுரை இங்கே மீள்பதிவு செய்யப்படுகின்றது.**

**-நன்றி -"லண்டன் குரல்"-**

காரைநகரில் அந்தந்த சாதியினர் தமக்கென்றிருக்கும் கிணறுகளில் மட்டுமே தண்ணி அள்ளுவது பழக்கத்தில் இருந்து வருகிறது. இருப்பினும் பெரும்பான்மையான நல்ல தண்ணிக் கிணறுகள் வெள்ளாளரின் வயல்களிலேயே இருக்கின்ற காரணத்தால், அந்த வயல் கிணறுகளுக்கு ஒடுக்கப்படுபவர்கள் தண்ணி எடுக்கச் செல்வது வழக்கம். இவர்கள் அங்கு தண்ணி பெற்றுக்கொள்ள முடியுமே அன்றி தண்ணி அள்ள முடியாது. குடங்களுடன் அங்குபோய் வரிசையில் நின்றால் ஆதிக்க சாதியினர் முட்டாமல் தட்டாமல் தண்ணி ஊத்தி விடுவினம். மற்றபடி, ஒடுக்கப்பட்டவர்கள் தண்ணி அள்ள அங்கு அனுமதியிலை. இதில் கேவலமான விசயம் என்னவென்றால் இந்த கிணறுகளில் பெரும்பாலானவை -அவை மேல்சாதியினரின் வயல்களுக்குள் கிடந்தாலும்- அரசாங்கத்தால் கட்டப்பட்டவை. இந்த பொதுக் கிணறுகள் தங்கள் வயல்களுக்குள் கிடப்பதால் வெள்ளாளர் அதைச்சுத்தி வேலிபோட்டு சொந்தம் கொண்டாடுவது காரைநகரில் அனைவருக்கும் தெரிந்த ஒன்று. அதிகமான பிரச்சினைகள் வெடிப்பது வறட்சிக்காலத்தில்தான். வெள்ளாளர் பெரிய பெரிய பீப்பாய்களை கொண்டுவந்து வயல் கிணறுகளில் தண்ணி அள்ளிக்கொண்டு போய்விடுவார்கள். 60, 70 பேருக்கும் மேலாக வரிசையில் நிற்கும் ஒடுக்கப்பட்டவர்களுக்கு அவர்களாக இரக்கப்பட்டு ஊத்திவிட்டால்தான் உண்டு. இத்தருணங்களில் சண்டைகள் தொடங்கும். தண்ணி எடுக்கும் இடத்தில் நித்தமும் நிகழும் சச்சரவுகள் மாதிரியன்றி இந்த சண்டைகள் பெரிதாக வளரும். உதாரணமாக 1987ம் ஆண்டு ஈஸ்ட்டர் மாதம் ஏற்பட்டகொந்தளிப்பை சொல்லலாம். ஈஸ்ட்டர் காலம் ஒடுக்கப்பட்ட பலகிறிஸ்தவ மக்களின் முக்கிய காலம். காத்து காத்து நின்று பீப்பாய்களில் தண்ணி போய் கிணறு வற்றும் போக்கு பொறுக்க முடியாமல் ஒடுக்கப்பட்ட மக்கள், தண்ணி ஊத்தி விடும்படி காத்துக்கொண்டு நிற்காமல் அள்ளிக் கொண்டுபோக வெடிச்சது பிரச்சினை. வெள்ளாளர் அல்லோல கல்லோலப் பட்டினம். மற்றக் கிணறுகளில் தாரை ஊற்றி தண்ணியை கெடுத்தினம். கிணத்தச் சுத்தி முள்ளுக்கம்பி வேலிய கட்டிச்சினம். சனம் அத புடுங்கிப் போட்டு தண்ணி எடுக்குது என்று காவலுக்கும் ஆள் வைச்சினம். இவை முள்ளுக் கம்பி வேலிபோட்டு காவலுக்கும் ஆள்வைச்ச இந்த கிணறுகளில் பெரும்பான்மையானவை காரைநகர் கிராம சபையால் கட்டப்பட்டவை. (காரைநகர் கிராம சபையின் மேலாதிக்கமும், முன்னால் எம்.பீ.(நாடாளுமன்ற உறுப்பினர்) தியாகராசா தண்ணியை டாங்கில ஏத்தி லைன் போட்ட பின்னனிகளை அடுத்த லண்டன் குரலில் பார்க்கலாம்). இந்த பிரச்சினை கன இடங்களில் வெடிச்சு பெரிதுபட்டுக்ககொண்டே போன போது, திலீபன், குமரப்பா(புலிகளின் முன்னணித் தலைவர்கள்) என்று பலரும் வந்து பெரிய கூட்டங்கள் வைக்க நேர்ந்தது. இதை முதன்மைப்படுத்த வேண்டாம் என்று சமாதானம் செய்ய வெளிக்கிட்ட கதையும் இத்தருணத்திலேயே நிகழ்ந்தது.

தண்ணிக்கு வழியில்லாத பெரிய அடிப்படை பிரச்சினையில் இருந்த மக்களிடம் வந்து இந்த பிரச்சினையை - அடிப்படை மனிதாபிமான பிரச்சினையை - பெரிதுபடுத்த

www.tamilarangam.net

# தட்டுங்கள் திறக்கப்படும்

-gRgjp- (N[Hkdp)

ஏதோ காரணங்களுக்காய்
ஏதோ ஒன்றும் புரியாமல்
அதோ விழுந்து கொண்டிருக்கின்றனர்
யாதும் புரியாத ஏழை எளியதுகள்
அதோ சில குழிகளிலும்
சில வணக்கத் தொப்பிகள்
தலை கவிந்து தொங்குகிறது ஆனால்
பழைய தேனீர் சுரபிகளிலும்
புதிய "கபே"க்களிலும்
எங்களுக்காக கவுக்கப்படுகின்ற
மூக்குப்பேணிகளின் வரிசைகளை
இன்னுமும் எறும்புகள் முற்றுகையிட்டபடி
தலைகவிழ்ந்து தொங்குகிறது
அந்த குழிகளில் தூங்கும்
தம்பிகளின் துப்பாக்கி முனையால்
அந்த மூக்குப் பேணிகளைத் தட்டிவிடக்கூடாதா?
மனசைத் தட்டுங்கள்



வேண்டாம். முதலில் நாட்டுப் பிரச்சினையை பார்ப்பம் என்று கூட்டம் போட்டு கதைக்க வெளிக்கிட்டதற்கு ஒடுக்கப்பட்டவர்கள் மத்தியில் ஆதரவு இல்லாமல் போனது ஆச்சரியமான விசயமில்லை. இந்தமாதிரி பிரச்சினைகள் தொடர்ந்து நடந்துகொண்டுதான் இருந்தது. இப்பொழுது கூட பல பொதுக் கிணறுகளை சுத்தி வேலிகட்டப்பட்டு உள்ளது.
தற்சமயம் நேவிக்காரன் தண்ணியை எடுத்துச் செல்வதால் மேலும் பற்றாக்குறை ஏற்பட்டதால் வெளியில் இருந்து தண்ணி கொண்டு வரவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கு.

காரைநகர் நலன்புரி சங்கத்தார் தம்காசில் வெளியில் இருந்து பௌசரில் தண்ணி கொண்டு வந்து சனத்துக்கு கொடுக்க பணஉதவி செய்கிறார்கள். அதற்கு ஆதாரமாக வண்டியை தள்ளிக்கொண்டு நின்று படம் எடுத்துக்கொண்டு வந்து லண்டனில் படம் காட்டுகிறார்கள். தண்ணிக்கு வழியற்ற சனத்துக்கு ஏதோ ஒரு வழியில் தண்ணி கிடைப்பது சரிதான். இவர்களது இரக்க சுபாவத்தாலும், தருமத்தாலுமே மக்களுக்கு தண்ணி கிடைப்பதாக நிறுவ முயலும் இவர்தம் மேலாதிக்க பாவனைகளைத்தான் பொறுத்துக்கொள்ள முடியாது.

இதே நலன்புரிசங்கக்காரர் பழைய காரைநகர் தண்ணி பிரச்சினைகளில் மும்முரமாக நின்றவர்கள். இன்று ஒடுக்கப்பட்ட இடங்களுக்கும் தண்ணிகொடுப்பதாக இவர்கள் காட்டும் பாவனை பழைய கொடுக்கும் மேலாண்மையை மீண்டும் நிறுவவே. நேவிக்காரனால் உப்பாகிப்போன கிணறுகளுக்கு மத்தியில் வாழும் மக்களுக்கு 20 ரூபாயோ சொச்சமோ கொடுத்து தண்ணி கிடைப்பது பெருங்காரியம். இந்த நலன்புரி சங்கம் இல்லாவிட்டால் இது நடக்குமோ என்று கேட்பவர்கள் சிந்திச்சு பார்க்க வேண்டும். இவர்கள் தமது சொந்த காசை கொண்டுபோய் இந்த வேலை செய்யவில்லை. இது சங்கக்காசு. இந்த சங்கக் காசு பெரும்பாலும் மேல்சாதியினரிடம் இருந்து வருகிற காரணத்தால் மேலாதிக்கத்தை நிறுவும் பணிகளுக்கே செல்கின்றன. உதாரணமாக
காரைநகர் இந்துக் கல்லூரிக்கு இக்காசு போகிறது. இப்பாடசாலையில் கிட்டத்தட்ட 70 பதுகள் வரை பிற்படுத்தப்பட்ட சமூகத்து மாணவர்கள் அனுமதிக்கப்படவில்லை. பின்பும் பிற்படுத்தப்பட்ட ஆசிரியர்கள் அங்கு பணிபுரிய முடியாத நிலையே அங்கு நிலவி வருகிறது. முன்பு இப்பாடசாலை அதிபராக வரவேண்டிய டானியல் மாஸ்டருக்கு நடந்த பிரச்சினைகளை காரைநகர் வாசிகள் அறிவர். இவரின் கலகம் தாங்க முடியாமல் வேறு வழியின்றி காரை சுந்தரம்பிள்ளையை அதிபராக போட்டு கூட்டணியினர் தப்பிக்கொள்ள முயன்ற கதையும் தெரியும். சுருக்கம் காரணமாக இதுபற்றி இங்கு விபரிக்கவில்லை ஆனால் நிச்சயமாக பின்பு பார்ப்போம். அதுமட்டுமின்றி இன்றைக்கு அங்கு தொடரும் மேலாதிக்க ஒடுக்குமுறைகளை கொஞ்சம் கொஞ்சமாக லண்டன் குரலில் வெளிக்கொண்டு வருவோம் என்பதையும் இங்கு கூறிக்கொள்கிறோம். போதாக்குறைக்கு காரைநகர் இந்துக் கல்லூரியில் வேலை செய்யும் பல ஆசிரியர்கள் நலன்புரி சங்கத்தாரின் உறவினர்களாகவோ, நண்பர்களாகவோ இருக்கிறார்கள். இந்த இந்துக் கல்லூரி இன்று மேலாதிக்க எம்.பி.தியாகராசாவின் பெயரால் அழைக்கப்படுகிறது. இந்த

5 ம் பக்கம் தொடரும்......



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலங்கைத் தலித் சமூகங்களுக்கு எதிரான சதிகளின் நவீன வடிவம்

## சான் ஏற முளம் சறுக்கும் நிலை...

இது எமது தலித் சமூகங்களுக்கு வரலாற்று ரீதியாக தொடரும் மரபாகவே நீடிக்கின்றது. சாதியத்தின் கொடுமையும் அதன் தீண்டாமை உணர்வும் காலத்திற்குக் காலம் வெவ்வேறு பரிமாணங்களில் தனது கோரமுகத்தைக் காட்டவே செய்கின்றது. அதன் வரலாற்றுத் தொடர்ச்சியின் மற்றோர் வடிவம்தான் அண்மையில் இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணிக்கு எதிராக புகலிடத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல்களாகும்.

ஆம் பார்க்காமலும்... கேட்காமலும்... பேசாமலும் குந்தியிருக்கும் குரங்கு நிலைச் சமூகமென எம்மை நிரூபிக்க எத்தனிக்கும் செயல்தான் புகலிடத்தில் நிகழ்ந்து வருகிறது. 1970 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற தொடர்ச்சியான தலித் சமூக விடுதலைப் போராட்டமானது தமிழ்த் தேசிய விடுதலை எனும் பெயரால் திசைமாற்றப்பட்டது. ஆனால் தலித் சமூகத்தின் மீதான ஒடுக்குமுறையானது தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியலிலிருந்து உரித்தெடுக்க முடியாது ஊனிலும், உணர்விலும் உறைந்து நிற்கிறதே.. ஏன்..!

எமது சமூகம், எம் மத்தியில் நிலவும் சாதியம், எமது அரசியல், எமது ஆயுதப்போராட்டம், அதை முன்னெடுத்த இயக்கங்கள், சர்வதேசியக் கோட்பாடுகள் என அனைத்திலும் எமக்குள்ள அதிகபட்ச அனுபவமும் தேர்ச்சியுமே எமது தற்போதைய இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி எனும் வளர்ச்சி நிலை. தொடரும் யாழ்ப்பாணிய மேலாதிக்கத்தின் தொடர்ச்சிதான் எம்மை பரந்துபட்ட சிந்தனைக்கான களம் நோக்கியும் நகர்த்தியது. எமது முன்னெடுப்புக்களில் பல்வேறு தரப்பினர் மத்தியில் மாறுபட்ட கருத்துவேறுபாடுகள் இருக்கலாம். இருப்பினும். அதையெல்லாம் பொருட்படுத்தாது நாம் ஏற்பாடு செய்த தலித் மாநாட்டிற்கு பல்வேறு தரப்பினருடைய ஒத்துழைப்பும், உதவிகளும், ஆலோசனைகளும் கிடைத்ததானது எம்மை உற்சாகப்படுத்தியதென்னவோ உண்மைதான்!

மாற்றுக் கருத்தியலாளர்கள், ஜனநாயக முற்போக்கு சக்திகள், பல்வேறுபட்ட தமிழ் அரசியல் கட்சிகள், பல்வேறு ஊடகங்களான, இணையத் தளங்கள், வானொலிகள், பத்திரிகைகள், என நீங்கள் அனைவரும் எமக்கு பக்கபலமாக இருப்பதாகவே நாம் கருதுகின்றோம். ஆனால் உங்கள் ஆதரவும், எங்களது நியாயமான கோரிக்கைகளையும் பொறுக்காத ஒரு சிலரின் நயவஞ்சக, அயோக்கியத்தனமான நடவடிக்கைகளானது எமக்கும் உங்களுக்குமிடையிலான உறவுகளையும் எமது தலித் சமூகத்தின் நியாயமான கோரிக்கைகளையும் சிதைக்கும் பாசிசப் போக்காக முகம் காட்டுகிறதே..ஏன்..!

தலித் மாநாடு ஆரம்பமாவதற்கு சில நாட்கள் முன்பாகவே எமது முன்னணியில் வன்முறையையும் கொலைகளையும் ஆதரிக்கும் அங்கத்தவர்கள் இருப்பதாக கேள்வி பரப்பப்பட்டது. பிற்பாடு அசோக் (யோகன் கண்ணமுத்து) அவர்கள் தலித் மாநாட்டிலும் இக்குற்றச்சாட்டை எம்மீது சுமத்தினார். கொல்லப்படுவதற்கும்... கொல்லக் கொடுப்பதற்கும் உகந்த ஒரு சமூகமாகவே எமது தலித் சமூகம் கருதப்பட்டு வருவதை எமது சமூகம் சார்ந்து சிந்திப்பவர்கள் அறிவீர்கள். இது வரலாற்று உண்மையல்லவா? ஆனால் எம்மத்தியில் கொலைகளுக்கும், வன்முறைகளுக்கும் ஆதரவுளிப்பவர்கள் இருப்பதாகப் புனையப்படுகிறதே ஏன்?

எம்மிடம் கொலையைத் தூண்டுபவர்களும், வன்முறை ஆதரவாளர்களும் இருப்பதாக மறைமுகமாகக் கூறி ஒற்றைக்கால் தவம் புரிகிறார்கள். இந்தத் தவசிகள் இவர்கள் வேறு யாரும் அல்ல அனைத்து அராஜகங்களுக்கும் எதிர்ப்புத் தெரிவிப்பவர்களாகவும் மிகப் பெண்ணாம்பெரிய ஜனநாயகவாதிகளாகவும் தம்மை இனம் காட்டிக் கொள்கின்ற நிழல் மனிதனான கருணைதாசன் எனும் நபரும். தீப்பொறி எனும் இணையத்தளமுமே ஆகும். இவர்களையே எமது தலித் சமூக மேம்பாட்டு முன்னணியை ஒழித்துக்கட்ட முனையும் நயவஞ்சகத்தனம் கொண்ட, அயோக்கியத்தனமான சக்திகளாக நாம் இனம் காண்கின்றோம்.

மாநாடு முடிந்து அதனது சுமைகளை நாம் இறக்கும் முன்பாகவே எமது தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் அங்கத்தவரான எம்.ஆர். ஸ்டாலின் (ஞானம்) மீதான அவதூறுகளை மேற்படி இரு அயோக்கிய நயவஞ்சக சக்திகள் மொட்டைக் கடிதங்களாகவும், ஆதாரமற்ற செய்திகளாகவும் பரப்பிவருகிறார்கள். இதற்கான பிரதம சூத்திரதாரியாக இருப்பது நிழல் மனிதனான கருணைதாசன் என்பது எம்மைப்போலவே அம் மர்ம நபரை நீங்களும் இனம் காண்பதொன்றும் கடினமானதல்லவே!!

## இவர்களின் திட்டமும்... நயவஞ்சக நோக்கமும்.

கடந்த காலத்தில் தலித் சமூக விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்த இடது சாரிச் சிந்தனையாளர்கள் இடையில் மௌனமாகி அடங்கிப்போனது எதனால்? அதை நாம் அதிகம் விளக்கத்தேவையில்லை. தமிழ்த் தேசிய விடுதலை என்பதற்குள் எமது தலித் சமூகத்தையும் உள் இழுத்து.. ஆயுதம் முகம் காட்டிப் பல்லிளித்துச் சன்னதமாட... அடங்கிப்போனது தலித் சமூகத்திற்கான கேள்விகள்.

அன்று நேராக ஆயுதம் எம்முன் நீண்டது... நாம் மௌனமானோம். அது அன்றைய வைதீக பாசிசம். இன்று எம்மீது ஆயுதம் நீட்டத் தூண்டுகிற செயலானது நவீன பாசிசம். எமது அங்கத்தவர் ஞானம் கருணாவுடன் தொடர்பு கொண்டவர். கருணாவிடம் பணம்வாங்கி வீடுகள் சொத்துகள் வாங்கிக் குவிப்பவர். அவரின் சொந்தப் பெயர் இது. அவர் இன்ன விலாசத்தில் இருக்கிறார். இப்படி அனைத்துத் தகவல்களும் கொடுத்து... புலிகளே உங்கட எதிரிகளை நாம் காட்டியுள்ளோம் உங்களுக்கு தில் இருந்தால் போய் சுடுங்கள். இதுதான் நவீன பாசிசம்.

www.tamilarangam.net

இவர்கள் அனைத்து அராஜகங்களுக்கும் எதிரானவர்களாம், மிகப்பென்னாம் பெரிய ஜனநாயகவாதிகளாம். இவர்கள் தாம் ஜனநாயகத்தை நேசிப்பதாகவும், அனைத்து அராஜகங்களுக்கு எதிராக குரல் கொடுப்பதாகவும் புரட்டுகள் புனைந்து கொண்டு தமது பாசத்திற்கும் நேசத்திற்குமான புலிகளுக்கு ஆதரவான நிதர்சனம் எனும் இணையத்திலும் எமக்கான அவதூறுகளையும் பிரசுரித்து மகிழ்கின்றார்களே . இதன் மர்மம்தான் என்ன !!!

நிதர்சனத்தின் புனைவுகளுக்கும், தீப்பொறி, கருணைதாசன் போன்றவர்களின் புரட்டுகளுக்கும் புனைவுகளுக்கும் என்ன வேறுபாடு ! என்ன உறவு ! மேலும் இந்தக் கருணைதாசன் எனும் நிழல் மனிதன் பல மறுப்புக் கருத்துக்களெனும் தனது நிலைப்பாடுகளை புலிகளின் ஈழமுரசு பத்திரிகையின் ஊடாக பிரசுரித்தும் வருகிறார் எனும் செய்தியும் உலாவுகிறதே!! இதனதும் மர்மம்தான் என்ன !!!.

இவர்களது சதித்திட்டமானது தலித் சமூக மேம்மாட்டு முன்னணிக்கும் சேர்த்தே நிகழ்கிறது. ஒரே கல்லில் இரண்டு மாங்காய் ஞானத்துடன் இருந்த தனிப்பட்ட பிரச்சனையும் தீரும். தலித் சமூக மேம்பாட்டு முன்னணியின் செயல்பாடுகளும் முடங்கிவிடும். கருணாவின் ஆள், கருணாவின் செல்வாக்கு, கருணாவின் பணம் இதெல்லாம் தலித் சமூகமேம்பாட்டு முன்னணிக்கும் சொரிகிறது. என யாழ்ப்பாணிய பொதுப் புத்தி இலகுவாகவே சாட்சியம் சொல்லும் எனும் நம்பிக்கையிலல்லவா இவர்கள் செயல்படுகிறார்கள். பாசிசத்திலே பால்குடித்து வளர்ந்த நபர்களாக அல்லவா இனம் காட்டிக் கொள்கிறார்கள் கருணைதாசனும், தீப்பொறி இணையத்தளமும். எமது வேலைத்திட்டத்தின் முன் நிபந்தனையாக இருப்பது கலாச்சாரப் பண்பண்பாட்டுத் தளத்திலான சமூக விடுதலை என்பது. அதை நாம் தலித் மாநாட்டிலும் வலியுறுத்தியுள்ளோம். எமது முன்னணியின் செயற்பாட்டாளர்களில் ஒருவரான ஸ்ரலின் ஒரு தலித்தாகவும், பிராந்திய ரீதியில் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவராகவும் உள்ளார். ஒடுக்கப்படும் இப்பிரிவினர்மீது சமூக அரசியல் தளங்களில் மேலாதிகம் செலுத்துவது யாழ்மையவாத கருத்தியலே என்பதை அடையாளம் கண்டு அவற்றை கணக்கில் எடுத்துச் செயல்படுபவர். அந்தவகையில் தான் யாழ்மேலாதிக்க அரசியல் செயல்பாடுகளுக்கு எதிராகவும், இராணுவ சக்திகளால் நிர்மூலமாக்கப்பட்ட முஸ்லிம்களுக்காகவும் அவரது குரல் கடந்த காலங்களில் பலமாக ஒலித்து வந்தது. இலக்கிய சந்திப்புகளிலும், மாற்று சஞ்சிகைகள், மற்றும் வெளியீடுகள் போன்றவற்றிலும் இருந்துவரும் அவரது பங்களிப்புகள் இவற்றை உறுதிப்படுத்தியே வந்திருக்கின்றன. புகலிட இலக்கியம் கொண்டிருக்கும் பாசிச எதிர்ப்புக் கூறுகளுக்கு எம்.ஆர்.ஸ்ராலினது பங்களிப்புகள் குறைத்து மதிப்பிடக்கூடியன அல்ல அவர் புலியிலிருந்து கருணா பிரிந்ததன் பிற்பாடுதான் இதைப் பேசத் தொடங்கியவரல்ல என்பதையும் பலர் அறிவர். ஆகவே சமூகம் சார்ந்த சாதியப் பிரச்சனைகளையும், பிராந்தியம் சார்ந்த அரசியலிலும் ஞானம் தீவிரமாகச் செயல்பட்டு வருபவர்.

தலித் சமூக மேம்பாட்டு முன்னணியுடன் சாதியம் சார்ந்த பிரச்சனைகளில் மட்டுமாகவே அவரது பங்களிப்பும் நிகழ்ந்து வருகிறது. அவரது நேர்மையிலும் அவரது செயல் பாடுகளிலும் தலித் சமூக மேம்பாட்டு முன்னணியாகிய நாம் மிகுந்த நம்பிக்கையுடனேயே செயலபட்டு வருகின்றோம். அவர் தொடர்பாக குறைந்த பட்ச நேர்மையும் அற்று நிழல் நபரான கருணைதாசன் எழுதும் முட்டாள்தனமான மொட்டைக்கடிதத்தையும், தீப்பொறியின் ஆதாரம் அற்ற செய்திகளையும் நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அத்தோடு ஈ.பி.டி.பி இயக்கத்தின் பொருளாதார உதவியுடனேயே எமது தலித் சமூக மேம்பாட்டு முன்னணி செயல்படுகிறது எனும் குற்றச்சாட்டும் தலித் மாநாடு தொடங்கவதற்கு முன்பாகவே பரப்பப்பட்டது. இவையாவும் ஒன்றோடு ஒன்று இணைந்த மேற்படி நயவஞ்சக அயோக்கியத்தனமுடையோரின் செயல் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. எமது த.ச.மே. முன்னணிக்கு ஆதரவு வழங்குபவர்களான ஜனநாயக முற்போக்கு சக்திகளே நீங்கள்தான் இதை பரிசீலிக்கவேண்டிய பாரிய பொறுப்பில் இருக்கிறீர்கள் என நாம் கருதுகின்றோம். தலித் சமூகத்தின் கடந்த காலப் போராட்டங்கள் திசைதிருப்பப்பட்டதன் ஓர் தொடர்ச்சியாகவே நாம் இதையும் அடையாளம் காண்கின்றோம். அப்படி நாம் கருதுவதில் தவறுகள் இருப்பின் அதைக்களைந்து எமது சமூகத்தின் நம்பிக்கைக்கு உதவுமாறும் உங்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

எமது தலித் சமூகத்தின் துன்பங்களும், துயரங்களும் செவிகளில் நுழையாது வெறுமனே காற்றில் மட்டுமே கரைந்து கொண்டிருப்பதா?

.

**– இலங்கைத் தலித் சமூக மேம்பாட்டு முன்னணி (பிரான்ஸ்)- 09-11-2007**

---

**3 ம் பக்கத் தொடர்ச்சி............**

தியாகராசாவின் மருமகன்தான் காரை நலன்புரிசங்கத்தின் செயலாளராக கடந்த 25 வருடங்களாக இருகக்கிறார். இவரது தகப்பனார் சபாபதிப்பிள்ளை எதுவித அரசியல்அடிப்படையுமற்று கட்சிக்கு கட்சி தாவி ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இயங்கியது பலரும் அறிந்ததே. கிட்டத்தட்ட சங்கம் தொடங்கிய காலம் தொட்டு இன்றுவரை சங்கத்தை தங்கள் சொந்த குடும்பச் சங்கமாக நடத்தி வரும் களபூமிக்காரரின் சாதித் தடிப்பு இன்று அச்சங்கத்தை ஏறத்தாள சாதிச்சங்கமாக மாற்றிவிட்டிருக்கு. பிறகேன் காரைநகர் பேரை இழுப்பான் என்று தெரியவில்லை. சும்மா வெள்ளாளர் நலன்புரிசங்கம், அல்லது களபூமியர் நலன்புரி சங்கம் என்று வைத்துக் கொண்டிருந்திருக்கலாம்.

சமீப காலங்களில் அகதியாக ஓடி வந்தவர்கள் போலன்றி இவர்கள் லண்டனில் நன்றாக கால் ஊன்றியவர்கள். அவர்களிடம் தாராளமாக இருக்கும் நேரமும் வசதியும் காரணமாக சமூகசேவை , சங்கம் என்று ஓடித்திரிய அவர்களாள் முடிகிறது. தங்களின் சுய திருப்திக்காக சங்கங்கள் கட்டும் பல்வேறு வசதியானவர்களில், காரைநகர் நலன்புரிசங்கத்தின் சாதிய தடிப்பு ஓங்கியிருப்பதால், அதில் ஒரு நல்ல சூடுபோட வேண்டியது எமது கடமையாக இருக்கிறது.

இந்த வருடம் அண்மையில் நடந்த இச்சங்கத்தின் ஒரு கமிட்டி கூட்டத்தில் அச்சங்கத்தின் உபதலைவர் கோணேசலிங்கம் ஒடுக்கப்பட்ட காரைநகர்வாசி ஒருவர்மேல் காழ்ப்பு காட்டி, இவர்களையெல்லாம் இச்சங்கத்துக்குள் கொண்டுவர வேண்டாம் என்று மிரட்டியது பலரதும் கோபத்தை கிளறிவிட்டுள்ளது. இதை கண்டும் காணாமல் இருந்தவர்கள், இது தொடர்பாக அதிருப்தியடைந்தவர்கள், பிரிந்து சென்று இன்னுமொரு சங்கம் கட்டியுள்ளவர்களின் கருத்துக்கள் முதலான மேலதிக செய்திகளை அடுத்த லண்டன் குரலில் படிக்கவும்.

ச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பேப்பர் ஆசிரியர் சேயோன் அவர்கட்கு ஒரு பகிரங்கக் கடிதம்.




**தமிழ்ச்** சமூக அக்கறையுடனும், தமிழ்ச் சமூக விடுதலைக்காகவும் பணிபுரிவதாக கூறிக்கொண்டு வெளிவருகிறது திரு.சேயோன் என்பவரையும் ஆசிரியராகக்கொண்ட 'ஒரு பேப்பர்' (லண்டன்) எனும் பத்திரிகை. இப்பத்திரிகையின் செப்டம்பர் 07-20-2007 இல் வெளிவந்த பிரதியில் பகுத்தறிவாளரான ஆசிரியர் திரு சேயோன் அவர்கள் ஒரு செய்தியை எமது சமூகத்திற்கு இப்படியாக வலியுறுத்துகிறார். *".... நண்பர் ஒருவர் எனக்குச் சொன்னார். ஒரு அய்யர் கோயிலில் அபிசேகம் ஒன்று செய்யச் சொல்லி தன்னைக் கேட்டதாகவும், தான் காரணத்தைக் கேட்டபோது, இம்மாதம் 'மோற்கேஜ்'* **(கடன்)** *கட்டக் காசில்லை என்று அய்யர் சொன்னதாகவும், நக்கல் சிரிப்புடன் சொன்னார்.*

*எனக்கும் சிரிப்பு வரப்பார்த்தது. ஆனால் உடனேயே நிறுத்தினேன், உறுத்தல்தான் வந்தது. அந்த அய்யர் பாவம் கோயிலை நம்பி அங்க வரும் பக்தர்களை நம்பி, மோற்கேஜ்ஜில்' வீடு வாங்கியிருக்கிறார். அந்த மாதம் அவருக்கு வருமானம் வரவில்லை. பாவம்தானே அவர்.*

*அவருக்கு தெரிந்த ஒரே தொழில் அய்யர் தொழில் அவரை பிற தொழிலுக்கு ஏவினால் அவரால் இயலுமா? கள் இறக்கும் தொழில் செய்யும் ஒருவரால் கள்ளைத்தானே இறக்கமுடியும். கடலில் மீன் பிடிக்க முடியாது. அப்படித்தான் இதுவும் அதனை புரிவது கடினமல்ல.........*

*.....மூன்று வருடங்களுக்கு முன்னர் எனது ஊருக்கை போனேன் எங்களூர்க் கோயில் அய்யர் வீட்டுக்குச் சென்றேன் பஞ்சத்தில் அடிபட்டிருக்கிறது அவர்கள் குடும்பம். அய்யர் மெலிந்து போய் இருக்கிறார். சாப்பிடச் சொல்லி வேண்டினார். வில்லங்கம் தாங்காமல் ஓமென்றேன். தங்களுக்குரிய சாப்பாட்டைக் குழைத்து திரணையாக்கி ஒரு திரணை எனக்குத் தந்தார் அய்யரம்மா. எனக்கு நெஞ்சு வலித்தது.*

*நான் ஒன்று செய்தேன் எனது பெற்றோரின் இறப்புக்குத் திவசம் செய்பவனல்ல நான். என்றாலும் அந்த வருடத்திலிருந்து செய்தேன். எப்படி? வருடத்தில் ஒருமுறை அம்மா, அப்பா பெயரில் அந்தக் கோயிலில் அன்னதானம் ஒழுங்கு செய்தேன். அவ்வூரின் ஏழைகள் சாப்பிட ஏதுவாக இருந்தது. அய்யர் குடும்பத்திற்கும் ஒரு தொகைப்பணம் கிடைக்க வழி வந்தது. மனிதனாக இப்படியும் வாழலாம் அல்லவா? "*

இந்த சேயோன் என்பவர் எவ்வளவு தாராள சீலன் பாருங்கோ!, எந்தப்பெரிய பகுத்தறிவு வாதி பாருங்கோ! ஏழைகள் கையேந்தித் தொடர்ந்து பிச்சைச்சோறு வாங்கித் தின்னவும்; அய்யருக்கு ஒரு தொகைப் பணம் தொடர்ந்து கிடைக்க வழி காட்டவுமான ஒரு பார்முலாவைத் தந்த தத்துவ ஞானியாக அல்லவா பிரகாசிக்கிறார்.

காந்தி சொன்னார் அவரவர் கரும வினையை செய்யுங்கள் மக்களுக்கு விடுதலை கிடைத்து விடும் என்று!! எங்கள் ஆறுமுகநாவலர்களும், இராமநாதன்களும், ஜீ.ஜீ பொன்னம்பலங்களும் எங்களுக்கு படிப்புக் கூடாது... அரசியல் உரிமைகள் , அந்தஸ்த்துகள் என எதுவுமே தொடுகிலும் ஆகாது என்றார்கள்!!.

ஆனால் பகுத்தறிவாளரும் தமிழ் சமூக அக்கறையாளருமான திரு. சேயோன் அவர்கள் எல்லோரையும் சயிற் எடுத்து பல ஆயிரம் ஆண்டுகளுக்கு பின்னால் எங்களை இழுத்துக் கொண்டுபோய் நிறுத்தி, கள்ளுச் சீவிறவன் கள்ளைச் சீவுங்கோ, மலம் வாருபவர்கள் மலம் வாருங்கோ. பறை அடிப்பவர்கள் பறையடியுங்கோ, பிணம் தூக்குபவர்கள் பிணம் தூக்குங்கோ என்கிறாரே!!

ஆனால் பொதுஜனமும் எங்களைச் சும்மா இருங்கோ... சாதி ஒண்டும் இப்ப இல்லை... ஒண்டு இரண்டு அங்க இங்க இருக்கு.... அதுவும் தமிழீழம் கிடைத்ததும் அழிந்து போடும் என்று தொல்லை கொடுக்கின்றதே. அது போதாதென்று எமது செயல்பாடுகள் பெயர் வாங்கவும், புகழ் சேர்பதற்காகத்தான் என்றும். நீங்கள் இப்படி ஆயிரக்கணக்கில் தேவையில்லாமல் செலவுசெய்வதை விட்டு அங்குள்ள தலித் சமூகங்களுக்கு அனுப்பினால் அதுகள் ஒரு நேரச் சோறு என்றாலும் தின்னுங்களே என்று புத்திமதி வேற. இந்த ஒரு பத்திரிகையின் ஆசிரியரான சேயோனுக்கும் இவ்வாலோசனைகளுக்கும் என்ன வேறுபாடு. சேயோனின் சாதியைப் பேணும் எழுத்துகளுக்கு என்ன பதில் இந்த பொதுஜனப் புத்தியிடம் இருக்குமென்று நாம் கேட்கின்றோம்.

நாமும் ஒரு மனித இனமென ஏற்றுக் கொள்ளாது, குடிப்பதற்கு நீர்கொடுக்காது, கோவில்களுக்குள் அனுமதிக்காது வாழவேண்டும் என வலியுறுத்தும் மதத்திற்குள்ளும் அதைப் பின்பற்றும் சமூகத்திற்குள்ளும் வாழ்கின்றோம். ஒரு குறிப்பிட்ட இன மக்கள் கல்வி கற்பதற்கு தடைவிதிக்கவும் பொருளாதாரத்தில் முன்னேறுவதற்கும் இடையூறாக இருப்பதை சமூகமென்றோ மதம் என்றோ கருதுவது தகுதியற்றது. விலங்குகள் தீண்டுவதை சகித்துக் கொள்ளுமாறும் ஒரு மனித உயிர் தீண்டுவதை பொறுத்துக் கொள்ள வேண்டாம் எனும் கருத்துடைய சமூகமும், மதமும் மானிட உணர்வு கொண்டவை அல்ல.

இவ்வாறான கருத்துக்களைக் கொண்ட ஒரு பேப்பர் பத்திரிகையில் வந்த செய்திகள் பற்றி எங்களுக்கு புத்தி சொல்பவர்கள் யாருமே கண்டுகொள்ள வில்லை. ஒரு பத்திரிகையில் வந்த மேற்படி சம்பவத்தைக் கண்டித்து கனடாவில் வசிக்கும் தலித் நண்பரான ஈழவன் ஒரு பத்திரிகைக்கு எழுதியதையும் அவர்கள் பிரசுரிக்கவில்லை. தலித் சமூகங்களுக்கு மட்டுமாகவே நாம் செயல்படுவதை அறிந்ததன் பிற்பாடே ஈழவன் எங்களிடம் அம் மறுப்புக்கட்டுரையை அனுப்பி வைத்துள்ளார். அவர் ஊடாகவே எமக்கும் அச்செய்தி அறியக் கூடியதாகவும் இருந்தது. அவர் «ஒரு பத்திரிகை»க்கு எழுதிய கட்டுரையை நாம் இத்துடன் பிரசுரிக்கின்றோம்.

**«வடு»**

www.tamilarangam.net

**அன்புடையீர்!**

தங்கள் பத்திரிகையான **ஒரு பேப்பர்** செப்ரம்பர் 07, செப்ரம்பர் 20 2007 இல் 8 ஆம் பக்கத்தில் சற்று மாறுதலுக்காக **மனிதனாக வாழ்ந்திட வேண்டும் மனதில் வையடா** என்ற தலைப்பில் தாங்கள் எழுதிய பந்தியில்,

.......... கள் இறக்கும் தொழில் செய்யும் ஒருவரால் கள்ளைத்தான் இறக்கமுடியும். கடலில் மீன்பிடிக்க முடியாது... என்று எழுதி ஐயரால் ஐயர் தொழில்தான் செய்யமுடியும் என்று பிராமணியத்துக்கு வக்காலத்து வாங்கியிருந்தீர்கள். குறிப்பிட்ட ஒரு தொழில் புரிந்த குடும்பத்தில் பிறந்த அனைவரும் அதே தொழிலைத்தான் பரம்பரை பரம்பரையாக செய்யவேண்டும் என்று வர்ணாச்சிரம தர்மத்துக்கு வலுச்சேர்க்கின்றிரா? அல்லது ஒருவர் குறிப்பிட்ட ஒரு தொழிலைச் செய்து தம்மையோ அல்லது தமது குடும்பத்தையோ பராமரிக்க முடியாத நிலையில் வேறு தொழிலை தேடிச்சென்று தமது வருமானத்தை அதிகரிக்க கூடாது என்று சொல்ல வருகிறீரா? எந்த உதாரணத்தை கையாழும் போதும் ஊடகவியலாளர்கள் மிக மிக கவனத்துடன் கையாள வேண்டும்.

உனக்குத் தெரியுமா? அன்று முதல் இன்றுவரை ஐயர்த் தொழில் செய்த செய்யும் குடும்பத்தில் பிறந்தோர் அனைவரும் ஐயர்த் தொழிலிலா ஈடுபடுகின்றார்கள். மன்னராட்சிக் காலம் முதல் மக்கள் ஆட்சிக்காலம் வரை ஆள்பவனுக்கு அமைச்சர்களாக, ஆலோசகர்களாக இருந்து தாம் விரும்பாத ஆட்சியாளர்களை தூக்கியெறியும் சாணாக்கியர்களாக சாதுக்கள் வேடத்தில் பல சாம்ராச்சியங்களை அழித்தவர்களாக, ஆக்கியவர்களாக இருந்திருக்கின்றனர். இன்றும் இருக்கின்றனர். இன்று பல்கலைக்கழகம் வரைசென்று பல கலைகள் அறிவியல் துறைகளில் மிகுந்த பாண்டித்தியம் பெற்று ஐயர் தொழிலை விட்டு பல தொழில்களில் ஈடுபடுகின்றனர். தாயகத்தில் ஐயர்த் தொழிலை விட்டு அரசாங்கச் சேவையில் இணைந்திருந்த பலர் புலம்பெயர்ந்த நாடுகளில் பகுதி நேர முழுநேர ஐயர்த் தொழிலில் ஈடுபடுவதை நாம் காணலாம். இது இறைபக்தியினால் ஏற்பட்டதல்ல. பணப் பக்தியினால் ஏற்பட்டது.

முதலாளித்துவ நாடுகளில் பொருட்கள் சேவைகள், விளம்பர யுத்திகளைப் பயன்படுத்தி இலாபத்தையும் பண வருமானத்தையும் அதிகரிப்பது போல் புலம்பெயர்ந்த நாடுகளில் இந்துமதக் கடவுள்களும் விற்பனை பண்டமாக்கி விளம்பரம் செய்யப்படுகிறது.

ஒரு புறம் தமிழ் தேசியம், மறுபுறம் இந்துத்துவார்த வர்ணாச்சிரம தர்மம். இந்துக்கடவுளார்க்கு தமிழ் தெரியா அவலம். 365 நாட்களும் பூசை புனஸ்காரம். பகுத்தறிவுக்கு ஒவ்வா பொம்மலாட்டம். இங்கிலாந்தில் பொறியியலில் பட்டம் பெற்ற இருவர் கனடா நாட்டில் முழுநேர ஐயர் தொழிலில் ஈடுபடுவதையும் நாம் காணலாம். இது இறை பக்தியினால் அல்ல. பொறியிலாளர்கள் பொறியியலாளராகத் தொழில் புரிந்து பெறும் வருமானத்தைவிட ஐயர்த் தொழிலில் அபரிதமான வருமானம் பெறுவதே குறிகோள். ஒருவர் தமது வருமானத்தை அதிகரிப்பதற்கு ஏற்ற தொழிலைத் தெரிவுசெய்வது தவறல்ல. ஆனால் ஒரு சமூகத்தின் பகுத்தறிவை கேள்விக் குறியாக்குவதனை தமது தமிழ்ச் சமூகம் இன்னும் எத்தனை காலத்துக்குத்தான் ஏற்று ஏமாறப் போகின்றதோ?

மீண்டும் உங்கள் உதாரணத்துக்கு வருவோம்.

உங்கள கூற்றுப்படி கள்ளிறக்கும் தொழிலாளியால் கள்ளை மட்டும்தான் இறக்கமுடியும். கடலில் மீன் பிடிக்க முடியாது. என்ற கூற்று மிகவும் சிறுபிள்ளைத்தனமானது. ஏன் மீன்களும் எந்த சாதியைச் சேர்ந்தவன் தூண்டில் இடுகின்றான், வலை வீசுகிறான் என்று பார்த்தா தூண்டிலிலோ வலையிலோ மாட்டுகிறது. நமது தாயக மக்களின் வாழ்வியல் வரலாறு தெரியாது எழுந்தமானமாக கருத்துக்கூறுவது முறையல்ல. கள்ளிறக்கும் தொழிலானது ஒரு பகுதிநேரத் தொழில். காலையில் ஓர் இருமணி நேரம், மாலையில் ஓர் இருமணி நேரம் இத்தொழிலில் ஈடுபடும் தொழிலாளர்கள் விவசாயத்தில் மீன்பிடியில் கட்டிடத் தொழிலில் வாகனம் செலுத்தும் தொழிலில் என பல தொழில்களில் ஈடுபடுவதையும் நீர் அறியமாட்டீர் போலும். கடலும் கடல் சார்ந்த பகுதிகளில் கள்ளிறக்கும் தொழிலாளர்கள் பலர் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபட்டனர். தீவுப் பகுதிகளிலும் ஆனைக்கோட்டை, சாவகச்சேரி, பருத்தித்துறை பகுதிகளில் கள்ளிறக்கும் தொழிலாளிகள் மீன்பிடியிலும் ஈடுபட்டனர்.

அச்சுவேலி, இணுவில், சுன்னாகம், மல்லாகம் போன்ற பகுதிகளில் கள்ளிறக்கும் தொழிலாளிகள் விவசாய உற்பத்தியிலும் ஈடுபட்டனர். யாழ்பட்டினத்தில் கள்ளிறக்கும் தொழிலில் ஈடுபட்டோர் வேறுபல தொழில்களிலும் ஈடுபட்டனர்.

வேலணை மேற்கில் கள்ளிறக்கும் தொழிலாளியாக இருந்த கந்தையா கள்ளிறக்கும் தொழிலில் ஈடுபட்டுக்கொண்டே படித்து பட்டம் பெற்று, பட்டப்பின் படிப்பு முடித்து ஆசிரியராகவும், பின்னாளில் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி உபஅதிபராக ஜோர்ச் கந்தையா என்ற பெயரில் கடமை புரிந்தார்.

கள்ளிறக்கும் தொழிலாளியாக இருந்த என் . ரி. செல்லத்துரை கள்ளிறக்கும் தொழிலாளியாக இருந்துகொண்டே பல வர்த்தக நடவடிக்கைகள், சமூக சேவைகள் என்பவற்றில் ஈடுபட்டு யாழ் மநாகர சபை துணை முதல்வரானார்.

நல்லூரைச் சேர்ந்த என் . ஈ .செல்லர் கள்ளிறக்கும் தொழிலில் இருந்துகொண்டே யாழ்ப்பாணத்தில் முதன் முதல் பத்து புத்தம் புதிய கார்களை வாங்கி முருகன் ரக்சி என்ற பெயரில் தொழில் நடத்தினார். யாழ் நகரில் வசித்த சின்னத்தம்பி மார்க்கண்டு என்ற கள்ளிறக்கும் தொழிலாளியே யாழ்ப்பாணத்திற்கு முதன் முதலாக புத்தம்புதிய (ஜளுருளுமு) இசுசூ என்னும் ஜப்பானிய பார ஊர்தியை வாங்கிவந்து தொழில் செய்தார். சிகை அலங்கரிப்பாளராக இருந்த ஜோசேப் டொமினிக் இன்று ஈழத்து தமிழ் இலக்கியத்துறையில், பல சாதனைகளை புரிந்து, மல்லிகை என்றும் மாதாந்த இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து தொடர்ந்து நாற்பது ஆண்டுகள் இலக்கிய ஊழியம் செய்து டொமினிக் ஜீவா என்ற பெயருடன் வாழ்ந்து வருகின்றார்.

சலவைத் தொழிலாளியாக இருந்த கே.டானியல் ஈழத்து தமிழ் இலக்கிய உலகில் சிறுகதைகள், நாவல்கள் பல படைத்ததுடன் தமிழ் மக்களின் சாபக்கேடான சாதி அடக்குமுறைக்கு எதிரான பல போராட்டங்களில் ஈடுபட்டு சமூகவிடுதலை போராளியானார். இன்று தமிழ் நாட்டுப் படைப்பாளிகள் கே.டானியலை தமிழர்கள் மத்தியில் தலித் இலக்கியத்தின் பிதாமகனாகக் கொண்டாடுகின்றனர்.

மேற்கூறப்பட்டவை சில உதாரணங்களே.

சமூகமாற்றமும், தொழில் பெயர்ச்சியும் காலம் காலமாக நடைபெற்றுவரும் நிகழ்வுகளாகும். இவை நவீன விஞ்ஞான யுகத்தில் அறிவுப் பெருக்கத்தினாலும், பகுத்தறிவின் விருத்தியினாலும் ஏற்பட்ட நல்ல விளைவுகளே.

விடுதலை, சுதந்திரமும், சுயநிர்ணய உரிமையும் அனைத்து மக்களுக்கும் கிடைக்கவேண்டும். அனைவரையும் கோடீஸ்வராக்கவோ, அல்லது கோமணாண்டிகளாக்கவோ எந்த அமைப்பாலும் முடியாது. ஆனால் அனைவருக்கும் மானுடன் என்ற அடிப்படையில் சமசந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும்.

**வலிமை உள்ளவன் வைத்ததெல்லாம் சட்டமாகாது தம்பி!**
**பிறர் வாழ உழைப்பவன் வைத்தது சட்டமாகனும் தம்பி!**

நன்றி

**அன்புடன்**

**-ஈழவன்- (கனடா)**

www.tamilarangam.net

# தீண்டாமைக் கொடூரங்களும் தீ மூண்ட நாட்களும்

இக்கால கட்டத்தில்தான் வட்டுக்கோட்டையில் கல்விமான் கம்யுனிஸ் தோழர் அ.வைத்திலிங்கம் போட்டியிட்டார். தோழர்கள் வி.பி., வைத்தி இருவரையும் வரவேற்று சங்கானை சந்தை மைதானத்தில் பொதுக்கூட்டம். சுன்னாகத்திலிருந்து வி.பி.யையும் தோழர் வைத்திலிங்கத்தையும் ஊர்வலமாக சங்கானைக்கு அழைத்து வருகிறார்கள். இவ் ஊர்வலம் கல்வளை வீதியாக சங்கானை செல்கிறது. நானும் எனது அம்மாவும் ஊர்வலத்தைப் பார்க்க கல்வளை றோட்டில் எனது வீட்டுக்கு முன்னால் நிற்கிறோம். ஊர்வலம் ஆர்பாட்டமாக சிவப்புக்கொடிகள், சிவப்புச் சட்டைகளுடன் கோ'ம் வானைப்பிளக்க எங்கள் பலம் பொன்னம்பலம், ஏழைகள் பலம் பொன்னம்பலம், பலம் பலம் பொன்னம்பலம், போடு புள்ளடி நட்சத்திரத்துக்கு நேரே. இப்படி இடிமுழக்கமாக சத்தம். ஊர்வலம் அண்மிக்கிறது. நான் அம்மாவின் பிடியில் இருந்து மெல்ல விடிவித்துக்கொண்டு ஆர்பாட்டத்தில் கோ'ம் போடுபவர்களுடன் இணைந்து நடக்கிறேன். ஜே....ஜே என்றும் சத்தம் போட்ட ஞாபகம்.

சங்கானை எனது வீட்டிலிருந்து 1 1.'.2 கிலோ மீற்றர் தூரம் வரும். நான் ஒருநாளும் இதற்கு முன் சங்கானை போனது கிடையாது. தனிய சீரணி சந்திவரைதான் ஆகக்கூடிய எமது பயணமிருந்தது. ஊர்வலத்தின் ஆர்ப்பாட்டம் வி.பி. மீதும் சிவப்புக்கொடிமீதும் இருந்து ஒரு வகைப் பற்றும் சகலதையும் மறக்க செய்கிறது. சங்கானைக்கு ஊர்வலம் செல்ல இரவாகிவிட்டது. கூட்ட மைதானமும் மேடையும் ஒரே சிவப்பு மயம். மின்விளக்குகள் உனக்கு பயமில்லாத குணம்தானே! என்ன துணிவிலடா சங்கானைக்கு போனனீ!! இப்படித் திட்டுக்கள். வழமையாக அம்மாவின் செல்லமான நான் ஐயாவை கட்டிப்பிடித்துக் கொள்கிறேன். அன்னம் (அம்மாவின் பெயர்) நான் கூட்டம் நடந்த இடத்துக்கு போகும்போது இவனுக்கு நாலு அடி அடிக்க வேணும் என்றுதான் எண்ணிக்கொண்டு நடந்த நான். அவன் இருந்து வி.பி. யின் பேச்சை கேட்ட வடிவு எனக்கு ஆசையாக இருந்தது. இவனுக்கு உந்த விசயம்தான் தலைக்குள்ள இருக்குபோல. அவனை பேசாதை என்றார். இவனுக்கு சாப்பாடில்லை! போய் படு. இது அம்மாவின் கண்டிப்புடன் கூடிய உத்தரவு. அம்மாவின் புறுபுறுப்பு தொடர்கிறது. மணியன் வரட்டும். (மணிமாமா அம்மாவின் தம்பி) இவனாலை சின்னப் பெடியள் கெட்டுப் போச்சுதுகள். கண்டறியாத அரசியல், கட்சி. விடியட்டும் மணியனை தூரத்துகிறேன் பார் என்று ஒரே கர, கர, புறு, புறு. நான் ஊர்வலத்தில் நடந்த களையில் தூங்கிவிட்டேன். இது என்னை அரசியலின் பக்கம் கம்யுனிஸ்ட் கட்சிப் பக்கம் செல்ல முதல் அத்திவாரம் எனலாம். தேர்தல் முடிவு வி.பி. தோல்வி. வைத்திலிங்கம் பத்தாயிரம் வாக்குகள் பெற்றார். இருந்தும் தோல்விதான்.

எனது தந்தையின் இளம்பராயத்தில் நடந்த சில சம்பவங்களை பின்நாட்களில் கேட்டு அறிந்துமுள்ளேன். அவரின் பின் பழுவின் முதுகில் பெரிய காயம் ஒன்று (தழும்பு) உண்டு. அத்தழும்பு விடயமாக நான் விசாரித்தேன். தனது காலத்தில்

## நினைவுக்குறிப்புகள்-03 - தோழர் யோகரெட்ணம்

சிலவற்றுக்கு சிவப்பு கடதாசியை ஒட்டி அவையும் சிவப்பாக ஒளிதர நட்சத்திரம் செய்து (தடியால்) அதுவும் சிவப்பாக ஒளிபரவ எனக்கு மகிழ்ச்சி சொல்ல முடியாத அளவு. மேடைக்கு கீழே நிண்ட கதிர்பாய்கள் விரித்து வைக்கப்பட்டிருந்தது. என்னையும், வேறு சிறுவர்களையும் மேடைக்கு முன் உட்கார பெரியவர்கள் சிலர் பணிக்கிறார்கள். அப்படியே உட்கார்ந்தேன். கூட்டம் ஆரம்பமாகிவிட்டது. பலர் பேசுகிறார்கள், இவர்களில் வி.பி.யை மட்டும் எனக்குத் தெரியும்.

என்னை சிலமணிநேரம் வீட்டில் காணாத அம்மா, ஐயா இருவரும் தேடி அலுத்துவிட்டனர். பின்னர் நான் சிலவேளை ஊர்வலத்துடன் சங்கானை போயிருக்கலாம் என ஊகித்து எனது ஐயா (தந்தை) கூட்டம் நடக்கும் இடத்துக்கு மிகவும் கோபமாக வந்திருக்கின்றார். நான் மேடைக்கு கீழ் இருந்து வி.பி.யின் பேச்சை உன்னிப்பாக (ஆ....வென) அவதானிப்பதை ஐயா கண்டுவிட்டார். ஐயாவின் கோபம் தணிந்துவிட்டது. கூட்டம் முடியும் நேரம் எனக்குப் பின்னால் வந்திருந்து தம்பி...துரை (இது எனது செல்லப்பெயர்) என்று கூப்பிட்டபோதுதான் எனக்கு வீட்டின் எண்ணம் வந்தது. பயமும் என்னை அறியாமல் ஏற்பட்டது. கண்கள் குளமானது. சரி சரி பயப்படாமல் வா, அங்க உன் அம்மா உன்னைக் காணாமல் தேடி களைத்துவிட்டாள். எக்கணம் அடிவாங்கப் போறாய் என்று கூறியதுடன் எனக்கு கச்சான் கடலையும் வாங்கி தந்தார். தனது தோள்களில் சுமந்து வீட்டுக்கு வரும் போது இரவு 10 மணி. வீட்டில் குப்பி விளக்கு ஒளிபரப்புகிறது. அம்மாவை தவிர அனைத்து சகோதர, சகோதரிகள் நித்திரையாகி விட்டனர். கட்டாக்காலி நாயே! நடந்த ஒரு கிராமசபைத் தேர்தலின் போது இலுப்பக்கடவை (துரை) நாகராசா சொந்தப்பெயர் இவர் சண்டியனாம். துரை அவர்களும் கோவிய கூழை நாகலிங்கமும் தேர்தலில் போட்டியிட்டனர். சைவ வெள்ளாளனை எதிர்த்து கோவியன் தேர்தலில் போட்டியிடுவது அன்று அவர்களால் தாங்கமுடியாத விடயமாகும். ஐயா அவர்கள் எனது தந்தை நாகலிங்கம் அவர்களை ஆதரித்து தலித் சமூகத்திடம் தேர்தல் பிரச்சாரம் செய்வதும் நாகலிங்கத்துடன் சேர்ந்து திரிவதும் வழமை. எனது தந்தை, அவர்களின் குடும்பத்தில் ஒரே ஒரு ஆண்வாரிசு - செல்லம் - வசதியான குடும்பம். எனது பேரன் வி'கடிக்கான மூலிகையை சேகரித்து கொடுப்பவர். (எனது 10 வயதில் இறந்துவிட்டார்.) அள்ளுகொண்டை, காதில் கடுக்கன், கையில் தங்கவளையம் எந்த நேரமும் இருக்கும் மிடுக்கான கிழவன்.

எனது தந்தைக்கு பொறுப்பு இல்லாத காரணத்தால் அவரை தட்டி கேட்பதில்லையாம். ஒரு நாள் தாங்கள் எல்லோர் வீட்டுக்கும் சென்று நாகலிங்கத்தின் சிவப்பு பெட்டிக்கு வாக்கு சேகரித்து விட்டு திரும்பினராம். அப்போது சின்னம் கிடையாது. சிவப்பு பச்சை நிறங்களில் தான் பெட்டி. கல்வளை பிள்ளையார் கோயில் வடக்கே மூன்றாவது வீடுதான் இலுப்பக்கடவை துரையின்

வீட்டு வீதியால் (அப்போது ஒழுங்கை) வரும்போது துரையின் வீட்டின் கேற்றில் கட்டிப் பறந்துகொண்டிருந்த பச்சை கொடியை பிடிங்கி அறுத்து அதனை கிழித்து அவரின் (துரையின்) முற்றத்துக்குள் வீசிவிட்டு திரும்பிவிட்டனர். தேர்தல் முடிவு துரைபடுதோல்வி. நாகலிங்கம் வெற்றி பெற்று விட்டார். (நாகலிங்கம் என்பவரின் மகன்கள் சிவஞானம், கார்கரவ ஜெனகன்) இதனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கேள்வித் துணைகள்

எஸ்.சாந்தன்
பிரான்ஸ்

**கேள்வி:**

**என்ன உங்கள் தலித் மேம்பாட்டு அமைப்பு ஆரம்பத்தில் இருந்தே கல்லெறி வாங்கிக் கொண்டே இருக்கிறதே? இல்லாத சாதியை இருக்கென்று சொல்லிக் கொண்டிருக்கின்றீர்களாம், இலங்கை அரசிடம் காசு வாங்கி இருக்கிறீர்களாம். இன்னம் எத்தனையோ..... இவற்றை எப்படி சமாளிக்கப்போகின்றீர்கள்?**

**பதில்:**

சமாளிக்கவில்லை, ரசிக்கிறோம். நல்ல நகைச்சுவை துணுக்குகள். இவர்களெல்லாம் கொஞ்சம் முயன்றால் நல்ல நகைச்சுவை எழுத்தாளர்களாகலாம். கற்பனை வளம் நிறைய இருக்கிறது பயன்படுத்துகிறார்கள். உங்களுக்குத் தெரியும்தானே கொமடி படைப்புக்களுக்குத்தான் லொஜிக் தேவையில்லையே! அது திரைப்படம், நாடகம், நாவல், கட்டுரைகளாக இருந்தாலென்ன.

சும்மா வாராவாரம் சிரிப்பூட்டுவதற்கென்றே எடுத்துவிடுகின்ற நகைச்சுவை துணுக்குகளை படித்து ரசித்துவிட்டுப் போவதுதான் நல்லது. நீங்கள் வேறு இதை சீரியசாக எடுத்துக் கேட்டுவிட்டீர்கள். உங்கள் சிந்தனைக்கே விடுகிறோம். மனசாட்சியைத் தொட்டு சொல்லுங்கள், நம்மிடையே சாதி ஒழிந்துவிட்டது என்று நீங்கள் உண்மையாகவே நம்புகிறீர்களா? சாதி இல்லையென்பதற்கு கொஞ்சமாவது ஆதாரம் இருக்கிறதா? ஆனால் சாதி இருக்கின்றது என்பதற்கு எத்தனை ஆதாரங்கள் இருக்கின்றன. இதனை மறுப்பவர்களுக்கும் இது நன்றாகவே தெரியும். ஆனால் என்ன செய்வது போட்ட வேடத்துக்கு பொருத்தமாக வசனம் பேசித்தானே ஆக வேண்டும். ஒட்டுமொத்தமாக யாழ் குடாநாட்டை விட்டு இடம்பெயர்ந்தபோது கூட அந்த மாபெரும் துயர நிகழ்வினூடு கூட உயர்சாதி என சொல்லப்படுபவர்கள் தங்கள் வீட்டு தண்ணி அள்ளும் கிணறுகளில் குப்பை கூழங்களை, உயிருடன் பூனைகளையும் போட்டுச் சென்றவர்களைப் பற்றிய செய்திகளை நீங்கள் அறியாதுவிடில் அது எங்கள் தவறல்ல. இது ஒரு சாம்பிள்தான். இதன் வேடிக்கை என்னவென்றால் சாதி இல்லையென்று எழுதுகின்றவர்களே ஒவ்வொரு சாதியினரும் தத்தமது சாதித்தொழிலைத்தான் செய்யவேண்டும் என்கின்ற அர்த்தத்தில் அவர்களை அறியாமலேயே உளறி இருக்கிறார்கள் இல்லை எழுதியிருக்கிறார்கள். இதுதான் அவர்களது வேடத்தையும் மீறித் தெரிந்துவிடும் உண்மைச் சொரூபம். இதைப் புரிந்துகொள்வது சுலபமெனில் உங்களது அடுத்த சந்தேகம் காசு வாங்கியது என்பது இவர்களது இப்படிப்பட்ட அப்பட்டமான சேறடிப்பு என்பதை நீங்கள் விளங்கிக் கொள்வதில் உங்களுக்கு எதுவித சிக்கலும் இருக்காது என்றே நாம் நம்புகின்றோம். இத்தகைய சேறடிப்ப இப்பவல்ல ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் குரலை ஒருமித்து ஓங்கி ஒலித்த தருணங்களில் எல்லாம் நடந்திருக்கிறது என்பதை நாங்கள் சொல்லித்தான் நீங்கள் தெரியவேண்டியிருக்குமென்றால் நீங்கள் ஈழத்தமிழர் வரலாறு பற்றி தெரியாதவர் என்றுதான் அர்த்தம். கொஞ்சம் முயன்றால் முழுவதுமாக அறியலாம். அதன்பின் எம்மிடம் இதுபற்றி நீங்கள் கேட்கவேண்டிய அவசியமே இல்லை. அவைகளைப் பற்றி நீங்கள் பிறரிடம் கூறி எமக்காக வாதாடுவீர்கள். தோழர் டானியல் அவர்களும், தோழர் டொமினிக் ஜீவா அவர்களும், இன்னும் பலரும் சாதிக்கொடுமையால் படாத பாடா? இதற்கு இன்னும் வாழ்ந்துகொண்டிருக்கும் தோழர் டொமினிக் ஜீவா உயிருள்ள சாட்சி. அண்மையில் தனக்கு ஏன் யாழ் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் தர மறுத்தது என்பது பற்றி சொல்லியிருந்தார். அதன் பின்னணியில் சாதியம் எப்படி செயற்பட்டது என்பது பற்றி நீங்கள் இலகுவாகப் புரிந்துகொள்ளலாம்.

எனவே எம்மீதான சேறடிப்பு என்பது மேல்சாதிய மேட்டுக்குடியினரால் இன்று நேற்றல்ல அன்றில் இருந்தே செயல்படுத்தப்பட்டு வருவது தெரிந்ததே. எனவேதான் நாம் இவற்றையெல்லாம் அலட்டிக்கொள்வதில்லை. இப்படி எழுதுகிறவர்களின் மனசாட்சி கூட பொய் பரப்புகிறார்கள் என்பதை சுட்டிக் காட்டிக்கொண்டுதான் இருக்கும். இருந்தும் ஏற்கனவே கூறியதுபோல் அவர்கள் போட்ட வேடத்துக்கு ஏற்ப பேசி நடித்துக்காட்டி நல்லபெயர் வாங்கத்தானே வேண்டும்.

ச

---

மிகவும் கோபம் கொண்ட சைவ வேளாளன் சண்டியன் இலுப்பக்கடவை துரை (நாகராசா) தன் கூலிகள் மூலம் என் தகப்பனை ஏமாற்றி கூப்பிட்டு இரவு நேரம் கண்டம் கோடாலியால் வெட்டப்பட்ட தழும்புதான் முதுகில் இருக்கிறது.

நான் முன் கூறியது போல திரு கந்தையா அவர்கள் வடக்கு, சண்டிலிப்பாய் தலித் மாணவ மாணவிகளின் கல்வியின் தேவையும் அதற்காக வட, சண்டிலிப்பாயில் ஒரு பாடசாலையின் அவசியத்தையும் மகாசபையிடம் முறையிட்டதுடன் மகா சபைத் தலைவர் தோழர் எம்.சி. அவர்களையும் நேரில் அழைத்து வந்து அப்பகுதி மக்களின் அடிப்படைத் தேவைகள் அவற்றில் கல்வியின் அவசியம் அனைத்தையும் விபரித்தார். தோழர் எம்.சி. மகாசபையின் ஆதரவை வழங்க முன்வந்தார். இதன் பயனாக திரு.கந்தையா, திரு.மு.சுந்தரமூர்த்தி, திரு.சு.கிருஸ்ணன் (மணிமாமா) போன்ற அன்றைய இளைய தலைமுறையினர் மிகவும் வேகமாக செயல்பட்டனர். இதன் விளைவுதான் சண்டிலிப்பாய் அரசினர் தமிழ் - கலவன் பாடசாலை. இப்பாடசாலையை 1959 இல் ஸ்தாபித்தனர். 1961 ஆம் வருடம் அரசு பொறுப்பு எடுத்தது. இப்பாடசாலையில் 10 ஆசிரிய ஆசிரிகைகள் ஆரம்பத்தில் தம் பணிகளை எதுவித ஊதியமுமின்றி தாம் சார்ந்த தலித் மாணவ மாணவியருக்கு கல்வி கற்பித்தனர். அத்தோடு ஒவ்வொரு ஆசிரிய ஆசிரியைகளும் ஆளுக்கு 25 பிள்ளைகளுடன் பாடசாலைக்கு சென்றனர். இப்படி இரண்டு வருடம் கஸ்ரப்பட்டனர்.

இப்பாடசாலையில் கற்பித்த ஆசிரியர்களின் பெயர்களை நினைவுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும். தலைமையாசிரியர் திரு.க.கந்தையா, ஆங்கில ஆசிரியர் திருநாவுக்கரசு(மாணிப்பாய்), ஆங்கில ஆசிரியர் செ.இராசரத்தினம் (சண்டிலிப்பாய்), இவர்களுடன் மல்லாகம் திருநாவுக்கரசு, கட்டுடை செ. இரத்தினம், அளவெட்டி க.செல்லையா (தம்பித்துரை), சண்டிலிப்பாய் இ.சின்னத்தம்பி, அளவெட்டி கேல்வதை செல்வி பூமலர் சின்னத்தம்பி, அளவெட்டி நாகனாவத்த, செல்வி. சரசு சீனியன், சண்டிலிப்பாய் கேணிக்கட்டு செல்வி நாகரத்தினம் (சற்குணம்), இராமன் ஆகியோர் தம் தியாக உணர்வுடன் எதுவித ஊதியம் இன்றி பணிபுரிந்தனர்.

தொடரும்..... r



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# ஈழத்து தலித் அரசியலில் ஒரு மைல்கல்

## பரிஸ் தலித் மாநாடு






ஒக்டோபர் மாதம் 20, 21 ஆம் திகதிகளில் பிரான்சில் நடைபெற்ற தலித்மாநாடு மிகவும் காத்திரமான ஒன்றாக நிறைவேறியிருக்கின்றது. அதனூடாக இலங்கை அரசியல் சூழலில் தலித் மக்களின் அரசியல் எதிர்காலம் பற்றிய கருசனை கொள்ளலை தவிர்க்கமுடியாததொன்றாகவும் தட்டிக்களிக்க முடியாததொன்றாகவும் இம்மாநாடு முன்னிறுத்தி உள்ளது. அந்தவகையில் இன் மாநாட்டின் நோக்கங்கள் வெற்றிகரமாக பரவலாக்கப்பட்டு வருவதை அறியமுடிகின்றது. இம்மாநாட்டை தொடர்ந்து பலவித செய்திப் பத்திரிகைகள் மற்றும் இணையத்தளங்களிலும் இம்மாநாடு பற்றியும், தலித் அரசியல் பற்றியும் விவாதங்கள் தொடர்ந்து வருவதை அவதானிக்க முடிகின்றது.

கடந்த காலங்களில் அதாவது தமிழீழ விடுதலைப் போராட்டம் ஆரம்பிக்கப் படுவதற்கு முன்பாக இலங்கையின் வடபுலத்து வாழ் தலித் மக்களின் தீண்டாமை எதிர்ப்புப் போராட்டங்கள் வலுவடைந்திருந்தமை வரலாறு சொல்லும் பாடம். யாழ்பாண வாலிபகாங்கிரஸ், சிறுபான்மைத் தமிழர் மகாசபை, தீண்டாமை வெகுசன எதிர்ப்பு இயக்கம்.... போன்ற அமைப்புகளின் சமூக சமத்துவத்துக்கான முன்னெடுப்புக்கள் இத்தகைய தலித் மக்களின் போராட்டத்திற்கு உரமிட்டு உத்வேகமளித்திருந்தன. இந்த போராட்டங்களின் ஊடாக அம்மக்களின் வாழ்வியல் உரிமைகள் பலவகைகளிலும் மீட்டெடுக்கப்படும் வாய்ப்புகள் ஏற்பட்டது. கல்வி வாய்ப்பு, சமூக நிகழ்வுகளில் சம அந்தஸ்து என்று அவ்வுரிமைகள் மீட்டெடுக்கப்பட தொடங்கின.



ஆனாலும் அரசியலில் நிர்ணய சக்திகளாக விளங்கிய ஆதிக்க சாதி கருத்தியலின் பிடியில் இருந்து தமது அரசியல் உரிமைகளை மீட்டெடுக்க அவர்களால் முடிந்திருக்கவில்லை. தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர்விடுதலைக் கூட்டணி என்று ஒன்றன் பின் ஒன்றாக தமிழர் மத்தியில் செல்வாக்கு மிக்க கட்சிகள் எல்லாமே மேட்டுக்குடிகளின் மனம் கோணாமல் பிற்போக்குவாதங்களையே பிரதிநிதித்துவப்படுத்தி வந்தன.

இக்கட்சிகளால் தொடரப்பட்டு வந்த மேலாட்சியே தலித்மக்களின் அரசியல் உரிமைகள் வென்றெடுக்கப் பட முடியாமைக்கு முக்கிய காரணங்களாகும். அதைத் தொடர்ந்து இலங்கை அரசியலில் கூர்மையடைந்த தமிழ் - சிங்கள இனமுரண்பாடுகள் தமிழ் சமூகத்தின் சாபக்கேடான சாதிய முரண்பாடுகளை, அவற்றைத் தீர்ப்பதற்கான போராட்டங்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளின. இதன் காரணமாக தலித் மக்களின் போராட்டங்கள், அவர்களது அரசியல் விருப்புக்கள்... யாவுமே மூட்டை கட்டி வைக்கப்பட நேர்ந்தது.

## புகலிட இலக்கியம்

ஆனாலும் புகலிடத்தில் இருந்து இந்தக் குரல்கள் இன்று எழுப்பப்படத் தொடங்கியிருக் கின்றன. புகலிட இலக்கியத் தில் கருக் கொண்ட சில கலகக்குரல் கள் தமிழ் தேசிய வாதம் எனும் கோசத்துக் குள் தலித் மக்களின்



முதற்தர பிரச்சனைகளான சாதிய ஒடுக்குமுறைகள் மூழ்கடிக்கப்பட்டு கிடக்கின்ற நிலமைகளை இக்குரல்கள் அடையாளங் காட்டத்தொடங்கின.

புகலிட நாடுகளில் தஞ்சமடைந்திருந்த முற்போக்கு சக்திகள், எழுத்தாளர்கள் போன்றவர்களிடமிருந்து உருவாகிய புகலிட இலக்கியம் இச்செயற்பாடுகளின் தோற்றுவாயாக அமைந்திருந்தது. இவர்களிடமிருந்தது வெளியாகிய சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றிலும் இவற்றை அண்டி நடைபெற்ற இலக்கியச் சந்திப்புகள், பெண்கள் சந்திப்புகள் போன்ற நிகழ்வுகளிலும் தலித் அரசியல் குறித்த எண்ணக் கருக்கள் அவ்வப் போது வெளிக்காட்டப்பட்டு வந்தன. குறிப்பாக பிரான்சில் இருந்து வெளிவந்த எக்ஸில் சஞ்சிகை, இருள்வெளிக்குழுவினர் போன்றவற்றின் செயற்பாடுகளும் அவற்றைச் சார்ந்த பலரின் செயற்பாடுகளும்



தலித் அரசியல் விழிப்புணர்வை புகலிட மட்டத்தில் மட்டுமல்ல இலங்கை, இந்திய மட்டத்திற்கும் எடுத்துச் செல்ல வழிகோலின. நோர்வேயில் இருந்து வெளிவந்த பறை எனும் சஞ்சிகை தலித் இலக்கிய இதழாக துடித்தெழுந்த போதும் ஓரிரு இதழ்களுடன் அது நின்று போனது. அத்தோடு இலங்கை இந்திய தலித் செயற்பாட்டாளர்களின் ஐரோப்பிய வருகையும் புகலிடத்தில் கருக்கொண்ட தலித் அரசியலுக்கு உரமேற்றியது. அந்த வகையில் பிரபல எழுத்தாளர்கள் டொமினிக் ஜீவா, தங்கவடிவேல் மற்றும் இந்தியாவில் இருந்து எழுத்தாளர்களான அ.மார்க்ஸ், சிவகாமி, சாருநிவேதிதா, பிறேம், பாமா, ரஜினி, கே.குணசேகரம்..... போன்றோரின் வரவுகளும் தலித் இலக்கியம், தலித் அரசியல், தலித் பெண்ணியம் போன்ற கருத்தாக்கங்கள் பற்றிய ஆரோக்கியமான விவாதங்களை வளர்த்துச் செல்லவும் அவற்றினை இலங்கை தலித்துகளின் வாழ்வியல் மேம்பாட்டுக்கு உறுதுணையாக்கும் வழிகளையிட்டு சிந்திக்கவும் தூண்டின எனலாம்.



## தலித் சமூக மேம்பாட்டு முன்னணி.

பிரான்சை அடிப்படையாக கொண்டு இலங்கை வாழ் தலித்மக்களின் மேம்பாடு கருதி ஒரு முன்னணி உருவாக்கப்பட வேண்டும் என்கின்ற சிந்தனைக்கு புகலிட கலை இலக்கிய சூழலில் ஏற்பட்ட தலித் இலக்கியம் குறித்த கவன ஈர்ப்பின் தாக்கமும் ஒரு முக்கிய காரணமெனக் கொள்ளலாம். தலித் விடுதலையில் அக்கறைகொண்ட பலரை ஐரோப்பிய மட்டத்தில் ஒருங்கிணைத்து இம்முன்னணி தோற்றம் பெற்றது. இம்முன்னணியின் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டு ஒருவருடங்களே ஆகின்ற நிலையில் இதனது செயற்பாடுகள் வேகமாகவும், விவேகமாகவும் வலுப்பெற்று வருவது மகிழ்ச்சிக்குரியதொன்று. தமிழ் தேசியவாதத்துக்குள் மறைந்து கிடக்கின்ற அல்லது இரண்டாம் பட்சமாக்கப்பட்டு கிடக்கின்ற சாதிப் பிரச்சனையை முன்னணிக்கு கொண்டுவந்து அதுபற்றிய கவனத்தை ஜனநாயக சக்திகள் மட்டத்தில் பரவலாக கொண்டுசெல்லும் நோக்கத்தோடு இம்முன்னணி சார்பில் தலித் மாநாடு நடத்தப்பட்டது. தலித் மக்களின் வாழ்வில் மேம்பாட்டை கொண்டுவரவேண்டும், அரசியல் அதிகாரங்களில் தலித் மக்களுக் குரிய பங்குகள் வழங்கப்பட வேண்டும் போன்ற விடயங்களை நோக்கிய உரையாடல்கள் இம்மாநாட்டில் இடம்பெற்றிருந் தன. சுமார் 100 இற்கும் அதிக மான பேராளர்கள் ஐரோப்பா, கனடா, இந்தியா என்று உலகின் பல பாகங்களிலும் இருந்து கலந்து கொண்ட இம் மாநாடானது முதன் முறையாக தலித்



# முதலாவது தலித் மாநாட்டு வரவு செலவு (20, 21-10-2007)

| விபரம் | வரவு | விபரம் | செலவு |
|---|---|---|---|
| உறுப்பினர்களின் பங்களிப்பு | 1495.00 | மண்டப வாடகை | 1000.00 |
| | | காலை, மதிய உணவு | 880.00 |
| ஆதரவாளர்கள் அன்பளிப்பு | 450.00 | போஸ்ரர் | 120.00 |
| | | சவுண்ட் | 150.00 |
| மண்டபத்தில் சேர்க்கப்பட்ட நிதி | 612.65 | இதரசெலவுகள் | 341.90 |
| | | கையிருப்பு | 65.75 |
| **மொத்தம்** | 2557.65 | **மொத்தம்** | 2557.65 |

மீதி 65.75 வடு பத்திரிகைக்கு நிதியத்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

***தலித்மாநாட்டுக்கு உதவியளித்த நண்பர்களுக்கு தலித் சமூக மேம்பாட்டு முன்னணியினராகிய நாங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.***

மக்களின் பேரில் புகலிடத்தில் கூட்டப்பட்டிருந்தமை முக்கியமானதொன்றாகும். ஆதிக்க சாதிகளுக்கு சார்பான சக்திகள் இம்மாநாட்டினை குழப்பும் நோக்கோடு பல்வேறு புரளிகளையும் பொய்ப்பிரச்சாரங்களையும் கிளப்பிவிட்ட போதும் அனைத்தையும் தாண்டி மாநாடு வெற்றியளித்திருக்கின்றது.

அத்தோடு தமிழ் மக்களிடையே ஜனநாயகத்துக்கும் மனித உரிமைக்குமாக போராடுகின்ற முற்போக்கு சக்திகளிடையே தமிழ் மக்களின் விடுதலை என்பது சமூக விடுதலையை அடிப்படையாகக் கொண்டது என்பதை அழுத்தம் திருத்தமாக கூறிச்சென்றிருக்கிறது இம்மாநாடு எனலாம். அந்தவகையில் சுமார் மூன்று, நான்கு தசாப்தங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் தீண்டாமை ஒழிப்புப் போராளிகள் விட்டுச்சென்ற பணியை தொடர்ந்து முன்னெடுக்கும் கடினமானதொரு வரலாற்றுக்கடமையை பிரான்ஸ் ***தலித் சமூக மேம்பாட்டு முன்னணி*** இம் மாநாட்டின் ஊடாக மீளத்தொடங்கியிருக்கிறது.



